இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
பட்டப்பின் கல்வி டிப்ளோமா
இறுதிப் பரீட்சை 2004 /2005
ESP 1106 - கல்வி வழிகாட்டலும் ஆலோசனை கூறலும்
காலம் : மூன்று(03) மணித்தியாலங்கள்

திகதி: 22.07.2006 நேரம்: மு.ப 9.30 - பி.ப 12.30

பகுதி I இல் உள்ள எல்லா வினாக்களுக்கும் பகுதி II இல் இருந்து எவையேனும் மூன்று வினாக்களுக்கும் விடை எழுதுக.

## பகுதி I

1. 'கல்வி வழிகாட்டல்' மற்றும் 'கல்வி ஆலோசனைகூறல்' என்ற எண்ணக்கருக்களை வேறுபடுத்துக.

2. தொழில் வழிகாட்டல், ஆலோசனை கூறலின் பிரதான குறிக்கோள்கள் மூன்றினைக்(03) குறிப்பிடுக.

3. மாணவர் பொருத்தப்பாட்டிற்கும் பயன்மிகு கற்றலுக்குமிடையே உள்ள தொடர்பினை விளக்குக.

4. ஆலோசனை கூறல் கொள்கைகள் பற்றிய அறிவு ஆசிரியர் ஒருவருக்கு தேவை எனக் கருதுகின்றீரா? உங்கள் விடைக்கு இரண்டு பிரதான காரணங்களைத் தருக.

5. எலை ஜின்ஸ்பேர்க்கின்(Eli Ginzberg) தொழில் வழிகாட்டல் தெரிவுக்கொள்கையில் குறிப்பிட்டபடி மூன்று கட்டத் தொழில் தெரிவுகளையும் குறிப்பிடுக.

6. பாடசாலை ஆலோசனைகூறலில் தனியாள் திரள்பதிவேடுகள் (Case Records) எத்துணையளவிற்குப் பயன்படுத்தப்படலாம் என ஆராய்க.

7. இயற்கை அனர்த்தம் ஒன்றிலிருந்து உயிர் பிழைத்த பாடசாலைச் சிறுவர்களுக்கு ஆலோசனை கூறலின் தேவை பற்றிய உங்கள் கருத்துக்களைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.

8. 'பார்ஸோனியன் மாதிரியை(Parsonian Model) விளக்குக

## பகுதி II

9. (i) பாடசாலை ஆலோசனைச் சேவைகளின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்கான மூன்று(03) வழிமுறைகளைக் குறிப்பிடுக.

(ii) பாடசாலை மாணவர்களுக்குக் கல்வி ஆலோசனை வழங்கலில் இவ் வழிமுறைகள் ஒவ்வொன்றும் எவ்வாறு உதவும் என்பதனைப் பொருத்தமான உதாரணங்ளுடன் விளக்குக.

10. (i) 'கற்றல் இடர்ப்பாடுகள்' (learning difficulties ) மற்றும் 'கற்றல் திறனின்மை' (learning disabilities) என்ற எண்ணக்கருக்களை விளக்குக.

(ii) கற்றல் இடர்ப்பாடுகளைக்கொண்ட மாணவர் சிலரைக் கொண்ட வகுப்பறையொன்றிற்குக் கற்பிக்கும் ஆசிரியர் முகங்கொடுக்கும் சவால்கள் எவை?

(iii) மேலே (ii) இல் குறிப்பிட்ட சவால்களை நீங்கள் எவ்வாறு வெற்றிகரமாக எதிர்கொள்வீர்கள் என விளக்குக.

11. 21ஆம் நூற்றாண்டு கட்டிளமைப் பருவத்தினர் ஒருவர் பொருத்தப்பாடான ஆளுமையை விருத்தி செய்து கொள்ள உதவுவதில் பாடசாலையின் பங்கு பற்றிப் பரிசீலனை செய்க.

12. வகுப்பறையில் பார்வைக் குறைபாடு அல்லது கேட்டல் குறைபாடு கொண்ட மாணவன் ஒருவனுக்கு எவ்வாறு உதவலாம் என்பது தொடர்பாகப் பின்வரும் விடயங்களின் கீழ் கட்டுக்கோப்பான அறிக்கை ஒன்று தயாரிக்க.

(அ) இம்மாணவர்கள் எவ்வாறு இனங்காணப்படுவர்.

(ஆ) இம்மாணவர்களுக்குத் திட்டமிடப்பட்டுள்ள பரிகாரச் செயற்பாடுகள்.

(இ) பரிகாரச் செயற்பாடுகளை அமுலாக்குதல்.

13. பின்வரும் தலைப்புகளில் எவையேனும் இரண்டினைத் தெரிவு செய்து அவை பற்றி குறிப்புகள் எழுதுக.

(i) பொருத்தப்பாடற்ற மாணவர்களைச் சமாளிப்பதில் ஆசிரியர்களின் பங்கு.

(ii) இலங்கையில் அரசதுறையினால் நடாத்தப்படும் ஆலோசனைச் சேவைகள்

(iii) தரம் 1 இற்கு அனுமதிக்கப்பட்ட மாணவர் ஒருவரிடம் தோன்றக்கூடிய பாடசாலைமீதான பயம்.

14. 'மாணவருக்கு ஆலோசனை கூறலானது ஆசிரியர் ஒருவரது முக்கிய கடமையாகக் கருதப்படினும் இன்றைய இலங்கைச் சூழ்நிலையில் இப் பணியை நிறைவேற்றுவது இலகுவான காரியமன்று' - இக்கூற்றினை நுணுக்கமாகப் பரிசீலனை செய்க.

பதிப்புரிமை பெற்றது